## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 10/2025**

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய வசந்தி **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 24.07.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | வசந்தி | | |
| Father /Husband Name | : | பன்னீர் | Court | : |
| Village | : | திருவிடைக்கழி | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 70/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான்.

| **எண்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரங்கள்** |
|---|---|---|
| 1 | 17.02.2007 | தமிழக அரசு வாதி பெயருக்கு வழங்கிய பட்டாவின் அசல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 25.03.2024 | வாதி பெயரில் உள்ள சொத்து வரி ரசீதின் அசல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | -- | தட்டு வீடு கட்ட செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் வழங்கிய ஆணையின் அசல் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | -- | வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்டு |

| | | |
|---|---|---|
| | | **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5. | 14.10.2023 | வாதியின் கணவர் பன்னீரின் இறப்பு சான்றிதழின் அசல் **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6. | -- | பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் வாதிக்கு கொடுத்த அட்டவணையின் அசல் **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.